**நிவிதிகல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 12 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 27 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் நிவிதிகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 374,000 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த சீராக்கம் செய்யப்பட்டு கணக்கு சரி செய்யபட வேண்டும். | தவறொன்று. 2019 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய குறித்துக்கொண்டேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளினுள் செயற்படுத்தப்பட்ட 14 வேலைகளுக்காக பெற வேண்டிய நிருவாக செலவினம் ரூபா 129,614 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவிலலை. | குறித்த சீராக்கம் செய்யப்பட்டு கணக்கு சரி செய்ய வேண்டும். | 2019 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது ஜர்னல் குறிப்பு மூலம் கணக்கீடு செய்ய குறித்துக் கொண்டேன். |
| (இ) | 6 கணக்கு விடயங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் நிதி கூற்றுக்கள் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டு பதிவேடுகள் பிரகாரம் மீதிகளிடையில் ரூபா 13,090,495 ஆன வித்தியாசம் நிலவியது. | நிதி கூற்றுகள் மற்றும் குறித்த பயன்பாட்டு பதிவேடுகளின் பெறுமதி சமன்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாததனால் கூட்டுத்தொகை ரூபா 1,258,163 ஆன 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஆய்வு செய்ய இயலாமலிருந்தது. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளை உருதிப்படுத்த முடியுமான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றுமம முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்ப்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2014 முதல் 2016 ஆண்டு வரை காலத்திற்குரிய ரூபா 721,368 ஆன வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலாவதியான வைப்பு தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிம். | 2019 ஆண்டின் போது பொது வைப்பு கணக்கில் உள்ள காலாவதியான வைப்புகளை சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். அது சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய 2009/01 இலக்க உள்ளூராட்ச்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் இலக்கம் 1.10 பந்தி | கடையறைகளை உப குத்தகை வழங்குவது தொடர்பாக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக கடையறை உரிமையாளர் 2018 செப்தம்பர் 18 ஆம் திகதி அறிவூட்டப்பட்டுள்ளார். |
| (இ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.12.1 (ஆ) வழிகாட்டி. | குறித்த அளவுத்திட்டத்திற்கு இனங்குவதாக உருதிப்படுத்திக் கொள்ளாமல் ரூபா 667,000 பெறுமதியான 02 கணனிகள், 01 மடிக் கணனி, 50 வீதி விளக்குகள் மற்றும் 120 நீர் மாணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெறுகைகள் வழிகாட்டி கோவையிற்கு இனங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொள்வனவு செய்த எல்லா பொருட்களையும் எதிர்காலத்தில் சுயாதீன பரிசீலனை ஒன்றை மேற்கொள்வதற்கும், இதன் பின்னர் கொள்வனவு செய்யப்படும் எல்லா பொருட்களையும் சுயாதீன பரிசீலனை ஒன்றை மேற்கொடு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,855,332 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 9,650,864 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,168,296 | 3,279,385 | 3,384,786 | 1,340,102 | 3,122,403 | 3,043,121 | 3,138,589 | 1,402,095 |
| (ii) | வாடகை | 4,399,800 | 5,553,416 | 5,568,416 | 90,950 | 4,165,100 | 4,097,000 | 4,053,050 | 105,950 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 538,300 | 479,696 | 483,196 | 1,500 | 406,900 | 380,210 | 376,710 | 5,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 12,396,250 | 18,427,938 | 17,026,489 | 15,433,247 | 14,435,800 | 14,977,031 | 10,213,649 | 14,157,014 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,159,990 ஆன நிலுவை வீத வரியினுள் 05 ஆண்டுகளை விஞ்சி நிலவி வரும் 206 அலகுகளிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 565,353 ஆன நிலுவையொன்றும் நிலவியது. இந் நிலுவை வீத வரி அறவிடல் தொடர்பாக சபையின் செயற்பாடு பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்காக மற்றும் செலுத்தாத சொத்துக்களுக்காக கள ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக அலுவலர்கள் அனுப்பப்படடுள்ளனர். மேலும் நிலுவை வருமானம் அறவிடலுக்காக இலக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் காலாண்டுக்கு ஒரு முறை என்னும் வகையில் சொத்துக்களை இரத்துச் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 113,578 ஆன அறவிட வேண்டிய நிலுவை ஏக்கர் வரியினுள் 05 ஆண்டுகளை விஞ்சிய பழமையான ரூபா 70,821 ஆன மீதிகளும் உள்ளடங்கி இருந்த போதும் நிலுவை ஏக்கர் வரி அறவிடலின் பின்தொடர் நடவடிக்கைகள் பழவீனமான நிலைமையில் காணப்பட்டன. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்ட ஏக்கர் வரி செலுத்தும் காணி உரிமையாளர்கள் காணி விற்பனை செய்தல், துண்டாடல் போன்ற காரணங்களால் ஏக்கர் விரி செலுத்துதலை புறக்கணித்துள்ளனர். இவ்வாண்டின் முன் இரண்டு மாதங்களினுள் ஏக்கர் வரி ஒப்பாய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு ஒரு முறை சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், சபைக்கு சொந்தமான நிவிதிகல புதிய வியாபார கட்டிடத்தொகுதியில் 13 கடையறைகளை 2004 ஆண்டிற்கு பின் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு புதிய வருமானங்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 செப்தெம்பர் 07 ஆம் திகதி மாதாந்த சபை குழு நியம இலக்க 05:01:xiv பிரகாரம் மீண்டும் கடையறைகள் பெறுமதி மதிப்பீடொனறிற்காக கடிதங்கள் தயாரிக்கப்பட்டு 2018 ஒக்தோபர் 18 ஆம் திகதி மதிப்பீட்டு திணைக்கயளகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அதிகார எல்லையினுள் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்க வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டிருக்காததுடன்,மீளாய்வாண்டில் உணவு பொருட்கள் விற்பனை மற்றும் ஹோட்டல் வேலைகள் உள்ளிட்ட 166 நிறுவனங்கள் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக கட்டணம் செலுத்தி இருந்த போதும், சுகாதார வைத்திய உத்தியோகத்திரின் பரிந்துரை வழங்கும் தாமதத்தால் 32 நிறுவனங்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. | வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய எல்லா நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிப்பத்திரம் விநியோகிக்க கூடிய விதத்தில் வேலைத் திட்டமொன்றை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். | 2019 ஆண்டின் வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்க விண்ணப்பம் சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட போதும் இது வரை வைத்திய பரிந்துரை கிடைக்காததனால் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க இயலாமயிலிருந்தது. இது தொடர்பாக சுகாதார வைத்திய உத்தியோகத்தர்களுடன் உரையாடி தமக்கு உரிய பிரிவுகளிளுள்ள வியாபார நிறுவனங்களை பரிசோதனை செய்வதற்கு நிகழ்ச்சித் திட்டமொன்று தற்போது தயாரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஏதிர்காலத்தில் இவை சீர் செய்ய முடியும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 இலக்கம் 56 மற்றும் 2000 இலக்கம் 53 கொண்ட சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இலக்கம் 47 கொண்ட தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களின் படி செயற்படுவதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத வேலைகளை சபை இனங்கணாததனால் அதிகார எல்லையில் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க இயலாமலிருந்தது. | அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களை இனங்கண்டு முறையாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சுட்டிக்காட்டியுள்ள 5 வேலைகளில 04 இற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் மீதான கள பரிசோதனையின் போது குறைபாடுகளை மீண்டும் சீர்செய்து கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையினுள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகைகளிற்காக அறவிட வேண்டிய ரூபா 96,680 மீளாய்வாண்டு இறுதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வு பிரகாரம் குறித்த நிறுவனங்களுக்கு செலுத்துமாறு அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. சபையில் இரண்டு வருமான பரிசோதக அலுவலகர்கள் இருக்கின்றமையால் இது தொடர்பாக துரிதமாக செயற்படுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

### 2.2.6 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 க்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,376,500 ஆனதுடன், 2016 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 11,843,922 ஆனது. 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2019 பெப்ரவரி வரையும் இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் தொடர்பாக தற்போது அட்டவணை தயாரித்து மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2017 மற்றும் 2018 ஆண்டுகளுக்குரிய முத்திரைக் கட்டண துணையேடு தயாரிப்பதற்கு சபை அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்படாததனால் அவ் அவ் வருடங்களுக்குரிய முத்திரை கட்டணத்தை இனங்கான இயலாமயிருந்தது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அதனை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசெம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் சரியாக இனங்கண்டு அதற்குரிய நீண்ட கால திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர் காலத்தில் திட்டங்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச மக்களுக்கு சுத்தமான குடி நீரை விநியோகிக்கும் நோக்கில் சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த நீர் சுத்திகரிப்பானை பயன்படுத்தாது குறித்த சங்கத்தினால் நேரடியாக நீர் மூலங்களிலிருந்து நீர் விநியோகிக்கப்பட்டிருந்ததனால் பொருத்தப்பட்டிருந்த நீர் மாணிகளில் துகல்கள் ஒன்றுசேர்ந்து | கருத்திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதாக பின்தொடர் உறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். | நீர் நுகர்வோர்களை தொடர்புபடுத்தி இது தொடர்பாக 2018 திசெம்பர் 29 திகதி விஷேட கூட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் மீண்டும் நீர் சுத்திகரிப்பானை பயன்படுத்தி நீரை சுத்திகரித்துக் கொள்ள சங்கம் உடண்பாட்டை தெரிவித்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படாததனால் நுகர்வோர்கள் நீர் மாணியை கழற்றி அகற்றியிருந்தனர். | | |
| (ஆ) | நீர் நுகர்வோர்களினால் நீர் மாணிகளை அகற்றியிருந்ததனார நீர் மாணி பொருத்தியதன் நோக்கத்தினை அடைந்து கொள்ள இயலாமலிருந்ததுடன், நீர்மாணிகளை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 306,100 தொகை விளைவற்று நிலவியது. | கருத்திட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படுவத ாக பின்தொடர் உறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டும். | நீர் நுகர்வோர்களினால் மாணி பொருத்தி நீரை பயன்படுத்த விருப்பம் தெரிவித்த போதும் மாணிகளினால் கிடைக்கும் கட்டணத்தை பிரதேச சபைக்கு செலுத்த விருப்பமின்மையை தெரிவித்துள்ளனர். இப் பிரச்சினையை எதிர்காலத்தில் தீர்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹங்கமுவ லபுவத்த பன்சலமலய பாதையை கொன்கிரீட் இடுவதற்காக 2010 ஆண்டு கிடைத்திருந்த மாகாண சபை ஏற்பாட்டிலிருந்து வேரொறு பாதையை அபிவிருத்தி செய்திருந்தமையால் பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்ய மாகாண சபை மறுத்திருந்தது. வேலைக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 200,000 முற்பணத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்த்துக் கொள்ள முடியாமலிருந்தது. | முறையான கருத்திட்ட மேற்பார்வை ஒன்றை மேற்கொள்ள வேண்டியதுடன், விசாரணை ஒன்றை நடாத்தி பொருப்பாளர்களை இனங்கண்டு குறித்த சீராக்கத்தினை செய்து கொள்ள வேண்டும். | 2010 ஆண்டு மாகாண சபை ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட ஹங்கமுவ லபுவத்த பன்சலமலய பாதைக்காக ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்யபபட்டுள்ளதுடன் அதன் பின்னர் பாதை கொன்கிரீட் இடப்பட்டுள்ளது. பாதையை அபிவிருத்தி செய்ததன் பின்னர் ஏற்பாடு ஒதுக்கப்பட்ட பாதையல்லாது அன்மையிளுள்ள வேரொறு பாதை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக முற்பணத் தொகையை தீர்த்துக் கொள்ள இது வரையும் முடியாதுள்ளது. |

**3.4 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 06 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த வேலை பெறுமதி ரூபா 1,724,692 ஆன தெற்கு தெல்லபட முதல் | வேலைகளின் நியமத்தை பரிட்சிக்க வேண்டியதுடன், ஏற்பட்டுள்ள | இக் கருத்திட்டத்தின் நிறுத்தட் பணம் செலுத்தப்பட்டு இருக்காததுடன், அப்பணத்தை செலுத்த முன்னர் பாதையில் கற்கள் மிதந்துள்ள இடத்தை |

| | | |
|---|---|---|
| வடக்கு தெல்லபட வரை அபிவிருத்தி செய்யப்பட்ட பாதையில் பெரும்பாலான இடங்களில் கற்கள் மிதந்துள்ளதனால் அதன் பூர்த்தி திருப்திகரமாக இல்லாததுடன், கொன்கிரீட் தட்டின் பருமன் உரிய நியமத்தில் இல்லாததாகவும், கொன்கிரீட் கலவை அதிக மணல் கலவையுடன் காணப்படுவதாகவும் 2018 ஓக்தோபர் 04 ஆம் திகதி சபையின் தொழில்நுட்ப அலுவலருடன் மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனயின் போது அவதானிக்கப்பட்டன. இக் குறைபாடுகளை நிறுத்தட் பணத்தை ஈடுபடுத்தி செய்து கொள்வதாக 2019 மே 10 திகதிய சபை செயலாளரின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | குறைபாடுகளை தடுத்தட் பணத்தை செலுத்த முன்னர் சீர்செய்து கொள்ள வேண்டும். | பூரணமாக உடைத்தகற்றி மீண்டும் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் காரணமாக வருடாந்த பாதீடை நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்த சபைக்கு இயலாமலிருந்தது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 11 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 6,780,951 ஆன மொத்த ஏற்பாடும் மீதியாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்கவும் அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | மதிப்பிடப்பட்ட சில வேலைகள் ஆண்டினுள் செயற்படாமை காரணமாக ஒதுக்கீடு சேமிப்பாக இருந்தது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 04 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 20,451,211 ஆன மொத்த ஏற்பாட்டில் 87 முதல் 95 சதவீதம் வரை வீச்சலவான சதவீதமொன்று சேமிப்பாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஓதுக்கி, ஓதுக்கிய ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | மதிப்பிடப்பட்ட சில வேலைகள் ஆண்டினுள் செயற்படாமை காரணத்தால் ஒதுக்கீடு சேமிப்பாக இருந்தது. |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை நிறுவி செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்டவாறு எதிர் காலத்தில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |